# பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணாக்கர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

பெரியார் பல்கலைக்கழகத்தில் முன்னாள் மாணாக்கர்கள் சந்திப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 22.04.2017 அன்று காலை 11.00 மணிக்கு பெரியார் கலையரங்கத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சுவாமிநாதன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெரியார் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டு 20 வருடங்கள் ஆகின்றன. இந்த சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் பயின்று பட்டம் பெற்று பல்வேறு துறைகளில், நிறுவனங்களில் பணியாற்றும் மற்றும் சொந்தமாக தொழில் நிறுவனங்கள் நடத்தி வரும் முன்னாள் மாணாக்கர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த சந்திப்பானது பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று வெளியே செல்லும் மாணாக்கர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ஒரு உறவு முறையை ஏற்படுத்துவதாக அமையும். மேலும் இதன் மூலம் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கும் பெரிய அளவில் உதவிகரமாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். மேலும் பல்கலைக்கழகம் துவங்கப்பட்ட காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது பல்கலைக்கழகம் அபரிதமான வளர்ச்சியைப் பெற்று மாநில அளவிலும், தேசிய அளவிலும் தரவரிசைப்பட்டியல் இடம் பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதோடு கல்விசார் வளர்ச்சியில் பெரியார் பல்கலைக்கழகம் அடைந்து வரும் முன்னேற்றத்திற்கு கிடைத்த அங்கீகாரம் எனவும் குறிப்பிட்டார். மேலும் பெரியார் பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீட்டு குழுவினால் மறுமதிப்பீடு செய்யப்பட்டு ‘A’ சான்றிதழ் கடந்த 2015-ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளது. மேலும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய தர நிர்ணய குழுவினால் தரவரிசைபடுத்தப்பட்டு இந்திய அளவில் மொத்தம் உள்ள 724 கல்விநிறுவனங்களில் நமது பெரியார் பல்கலைக்கழகம் 85-வது இடத்திலும் தமிழக அளவில் மாநில பல்கலைக்கழகங்களில் அளவில் 5-வது இடத்தையும் பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார். மேலும் பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு துறைகள் பல்வேறு நிதி நிறுவனங்களிடம் இருந்து பலகோடி ரூபாய் நிதியை ஆராய்ச்சிக்காக பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது எனவும் குறிப்பிட்டார். மேலும் இந்த பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆராய்ச்சிப்பணிக்கும், வேலைவாய்ப்புக்கும் முன்னாள் மாணாக்கர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதது எனவும் குறிப்பிட்டார். இதனால் முன்னாள் மாணாக்கர்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தவறாமல் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.